**சாட்சிகளின் வாக்குமூலம்**

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 203/2012**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

வாக்குமூலம் – பி.வா.சா.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிச்சாமி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 05.08.2026 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஆகஸ்ட் 05–ம் நாள் சாட்சியம்.

---

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பூர்வீகம் வரப்பட்டி. பிரதிவாதிகள் எனக்கு பங்காளி முறையாவார்கள். பிரதிவாதிகள் வீட்டிற்கு அடுத்த வீட்டிற்கு அடுத்த வீடாக எனது வீடு உள்ளது. 1ம் பிரதிவாதி பழனிச்சாமிக்கவுண்டர் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாகவே உடல்நிலை பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்தார். அவரால் வெளியில் எங்கும் செல்ல முடியாத நிலையில் படுத்த படுக்கையாக இருந்தார். 2ம் பிரதிவாதி பாகத்தைப் பொறுத்து அவரது மக்களான 3,4–வது பிரதிவாதிகளோடு சேர்ந்து நீதிமன்றம் மூலம் கிரையமும் சுவாதீனமும் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பழனிச்சாமிக்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சரிபாதியை 3,4–வது பிரதிவாதிகளுக்கு உயில் எழுதி வைத்துள்ளார். இந்த உயில் சொத்து போக மீதி சரிபாதி வாதி வகையறாவினருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் உயில்சாசனத்தில் 1–ம் பிரதிவாதியின் வீட்டில் வைத்து நான் சாட்சி கையொப்பம் செய்தேன். மேற்படி உயிலை கருப்புச்சாமி எழுதினார். அந்த உயில் சாசனம் 1–ம் பிரதிவாதி வீட்டில் வைத்து எழுதப்பட்டது. நான் சொல்வது போல் 1–ம் பிரதிவாதி உயில் சாசனம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் அந்த உயில் சாசனம் போர்ஜரியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஓம் /**R**.பாண்டி மகாராஜா,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தாராபுரம்.